SRI LANKA

இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்

# AA1 பரீட்சை- ஜூலை 2019

**வினாக்களும் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விடைகளும்**

**பாட இலக்கம் : AA13**

# வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல் (EBA)

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்**

இல:540, வென் முருத்துவெட்டுவ ஆனந்த நயிமி மாவத்தை,
நாரயின்பிட்ட ,கொழும்பு 05
தொலைபேசி இலக்கம் : 011-2-559669

**இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகத்தினால் பிரசுரிக்கப்பட்டது**

# இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர்கள் கழகம்
## AA1 பரீட்சை - ஜூலை 2019

## (AA13) வியாபாரம் மற்றும் கணக்கீட்டிற்கான பொருளியல்
## பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**இருபது (20) கட்டாய வினாக்கள்**
(மொத்தம் 40 புள்ளிகள்)

**பகுதி A**

**வினா 01 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்**

| வினா இல | விடை |
|---|---|
| **1.1** | 2 |
| **1.2** | 4 |
| **1.3** | 2 |
| **1.4** | 1 |
| **1.5** | 1 |
| **1.6** | 3 |
| **1.7** | 1 |
| **1.8** | 2 |
| **1.9** | 4 |
| **1.10** | 4 |
| **1.11** | சரியானது |
| **1.12** | தவறானது |
| **1.13** | சரியானது |
| **1.14** | தவறானது |
| **1.15** | சரியானது |
| **1.16** | நேர்மாறான/எதிர் |
| **1.17** | உயர்வானது |
| **1.18** | குறைவான |
| **1.19** | மூலதனம் |
| **1.20** | தொழில் நுட்ப அபிவிருத்தி |

*(ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)*

*பகுதி **A** முடிவு*

## வினா 02 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

அத்தியாயம் 01 வணிக பொருளியலுக்கான அறிமுகம்

**(a)** **i.** பொருளாதாரம் ஓன்றின் பிரதான பொருளமதார வளங்கள் (உற்பத்தி காரணிகள்) பின்வருமாறு

1. நிலம் (இயற்கை வளங்கள்)
2. உழைப்பு (மனிதனின் உடல், உள இயலுமைகள்)
3. மூலதனம் (மனிதனினால் உருவாக்கப்பட்ட வளங்கள்)
4. முயற்ச்சியாண்மை

***(02 புள்ளிகள்)***

**ii.** **1. நிலம்**

உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படும் எல்லா இயற்கை கொடைகளான அனைத்து வளங்களும் நிலம் என்னும் வரைவிலக்கணத்தினுள் உள்ளடக்குகின்றது. புவியின் மேற்பரப்பிற்கு மேலும் கீழும் உள்ள அனைத்தையும் உள்ளடக்கும். இயற்கை வளங்களானவை புதுப்பிக்க கூடியவை மற்றும் மீள புதுப்பிக்க முடியாதவை என உப பிரிவுகளாக பிரிக்கப்படுகின்றன. சில இயற்கை வளங்களின் தொடர்ச்சியான பாவனையானது அவ் வளங்களை அருகக்கூடிய நிலைக்கு தள்ளப்படுகின்றது. உதாரணமாக பெற்றோலிய வளத்தினை குறிப்பிடலாம். மற்றும் உற்பத்தி செயன்முறைக்கு நிலம் ஆனது இன்றியமையாத முக்கிய உற்பத்தி காரணி ஆகும். மேலும் நிலமானது உற்பத்திக்கு தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் காரணியாகும். நிலத்திற்கு விலையாக வாடகை வழங்கப்படுகின்றது.

உ+ம் : கடல், ஆறு, ஊற்று, குளம், காடு , ஏரிகள், மிருகங்கள், மீன்கள், பறவைகள் மற்றும் எண்ணெய் ஆகிய பல்வேறு தரப்பட்டவைகளை குறிக்கும்.

**2. உழைப்பு**

உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தக்கூடிய மனிதனின் உடல், உள இயலுமைகள் உழைப்பு
என வரையறை செய்யப்படுகின்றது. ஊழியத்தின் இயலுமையானது கல்வி மற்றும் திறமை அடிப்படையில் விருத்தி செய்யக்கூடியவை.தொழிற்பிரிப்பு மற்றும் உற்பத்தியில் சிறப்புத்தேர்ச்சி வாய்ந்த ஊழிய நியமனம் ஆனது ஊழியத்தின் சிறப்பு தேர்ச்சியாகும் மற்றும் இதனால் உற்பத்தி திறன் அதிகரிக்கும்.
இதன் விலை கூலிகள் அல்லது சம்பளம் ஆகும்.

உ+ம் : உடல் உழைப்புக்கு - கூலி தொழிலாளி
உள உழைப்புக்கு – ஆசிரியர் , வைத்தியர்

3. **மூலதனம்**

உற்பத்தி செயன்முறைக்கு பயன்படுத்தப்படுகின்ற மனிதனால் உருவாக்கப்பட்ட வளங்களாகும். இவையானது உற்பத்தி செயற்பாட்டிற்கு உதவும் காரணனியாக அமைவதோடு இது அனுதினம் வியாபாரத்திற்கு பயன்படும் நிதி மற்றும் நிதி சார்ந்த சொத்துக்களின் பெறுமதியினை குறிக்கின்றது. இதற்கு கொடுக்கப்படும் கொடுப்பனவானது வட்டி ஆகும்

உ+ம் : காணி, கட்டிடம், இயந்திரம், பாதை, விமானநிலையம்

4. **முயற்ச்சியாண்மை**

இது உற்பத்தி செயன்முறைக்கான எல்லா வகையிலான காரணிகளையும் கொள்வனவு செய்து ,உற்பத்தி படிமுறைகளை நடைமுறைபடுத்தி மற்றும் உற்பத்தி தொடர்பாக வரும் இடர்களை ஏற்றுக்கொண்டு உற்பத்தி செயற்பாட்டினை கொண்டுநடாத்துவதனை குறிக்கும். மேலும் இவ் முயற்ச்சிக்கு பெற்றுக் கொள்ளப்படும் கொடுப்பனவானது இலாபம் ஆகும். இது தனிப்பட்ட நபரின் ஆளுமையின் அடிப்படையில் ஈட்டிக்கொள்ளப்படும் வருமானம் ஆகும்

***(02 புள்ளிகள்)***

**(a) ii**

**<u>எதனை உற்பத்தி செய்தல் ( பிரச்சனையை ஒதுக்கீடு செய்தல்)</u>**

ஒரு பொருளாதாரத்தில் பொருட்கள் சேவைகள் தொடர்பானதும் மற்றும் அவ் பொருடள் சேவைகள் உற்பத்தி செய்யப்படும் அலகுகள் தொடர்பான பிரச்சனை ஆகும். பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில் பற்றாக்குறையான வளங்களின் ஒதுக்கடு மூலமாக எந்த பொருட்கள சேவைகள் உற்பத்தி செய்ய வேண்டும் மற்றும் எவ்வளவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பதனை சரியாக தெரிவு செய்தல தொடர்பானதாகும்

**<u>சந்தை பொருளாதாரத்தில்</u>**

இங்கு பொருட்கள் சேவைகளின் விலை மற்றும் அவ் பண்டத்திற்கான கேள்வியினை பொருத்தே எதனை உற்பத்தி செய்தல் என்பது தீர்மானிக்கப்படுகின்றது. மேலும் இங்கு உயர்ந்த விலையை கொண்டிருக்கும் பொருட்கள் அதிக எண்ணிக்கையாகவும் குறைந்த விலையுடைய பொருட்கள் குறைவாகவும் உற்பத்தி செய்யும் அடிப்படையினை கொண்டது.

**<u>திட்டமிட்ட பொருளாதாரத்தில்</u>**

இங்கு உற்பத்தி செய்தல் என்பது பொருளாதார வெளியீட்டின் பங்கீட்டினை மையமாக கொண்டுள்ளது. சமூகத்திலுள்ள எல்லா அங்கத்தவர்களின் தேவைப்பாட்டினை கருத்திற்கொண்டு எதனை உற்பத்தி செய்தல், மற்றும் எவ்வளவு உற்பத்தி செய்தல் என்பன நிர்ணயயிக்கப்படுகின்றது.

**<u>எவ்வாறு உற்பத்தி செய்தல் ?</u>**

பொருட்கள் மற்றும் சேவைகளை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் குறிப்பிடப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் காரணிகளின் இணைப்பின் அடிப்படையில் தெரிவினை மேற்கொள்ளுதல் ஆகும். இது எல்லா வகையிலான சமூகங்களும் எதிர்நோக்கும் பொதுவான பிரச்சனையாகும். ஏனெனில் வரையறுக்கப்பட்ட வளங்களை கொண்டு மிகச் குறைந்த செலவில் உற்பத்தி செய்பவவை ஆகும்

**<u>சந்தை பொருளாதாரத்தில்</u>**

இங்கு பொருட்கள் சேவைகளை உற்பத்தி செய்யப் பயன்படும் காரணிகளான தொழிற் நுட்பத்தின் விலையின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றது, அதாவது குறைந்த விலையிவான தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுதல். அதாவது குறைந்த உற்பத்தி செலவில் அதிக இலாபம் ஈட்டிக்கொள்ளுதல் தொடர்பானது ஆகும்

**<u>திட்டமிட்ட பொருளாதாரத்தில்</u>**

இங்கு உற்பத்தி செய்தல் என்பது பொருளாதார வெளியீட்டின் பங்கீட்டினை மையமாக கொண்டுள்ளது. இயற்கையில் கிடைக்கும் வளங்களின் அளவினையும் பயன்படுத்தப்படும் தொழில் நுட்பமானது மூலதன சார்ந்த தொழில் நுட்பமா அல்லது மனித வள தொழில் நுட்பமா என தீர்மானிக்கப்படுகின்றது.

**யாருக்காக உற்பத்தி செய்தல்?**

யாருக்காக உற்பத்தி செய்வது என்பது பொருளாதாரத்தின் காரணி உரிமையாளர்களிடையே தேசிய வருமானப் பகிர்விற்கேற்ப நிர்ணயிப்பதைக் குறிக்கிறது. ஒவ்வொரு சமூகத்திலுமுள்ளவரின் தேவைகளை நிவர்த்திச் செய்ய பொருட்களை மற்றும் சேவைகளை உற்பத்தி செய்ய வளங்கள் போதுமானதாக இல்லை. இந்த பிரச்சினை அனைத்து சமூகங்களுக்கும் பொதுவானது.

**<u>சந்தை பொருளாதாரத்தில்</u>**

இங்கு பண்டத்திற்கான கேள்வி மற்றும் கையாளப்படும் தொழில் நுட்பமுறைளினையும் நிறைய இலாபம் ஈட்டக் கூடிய வகையிலே யாருக்காக உற்பத்தி செய்தல் தெரிவு செய்யப்படும்.

**<u>திட்டமிட்ட பொருளாதாரத்தில்</u>**

இங்கு யாருக்காக உற்பத்தி செய்தல் என்பது பொருளாதார வெளியீட்டின் பங்கீட்டினை மையமாக கொண்டுள்ளது. சமூகத்திலுள்ள எல்லா அங்கத்தவர்களின் தேவைப்பாட்டின், கருத்து மையத்தினை அடிப்படையாக கொண்டு யாருக்காக உற்பத்தி செய்தல் தெரிவு செய்யப்படும்

***(06 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## வினா 03 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| அத்தியாயம் 02 நுகர்வோர் நடத்தையும் சந்தையும் |
|---|

**(a)** **i.** **சமநிலையில்**

Qd = Qs

Qd = 400 - 2p

Qs = -100 + 3p

**Qd** **=** சமநிலையில்

400 - 2p = -100 + 3p

500 = 5p

500/5 = p

**100 = P**

**பண்டத்தின் சமநிலை விலை = ரூபா. 100/-**

***(02 புள்ளிகள்)***

**ii.** P=100, யினை சமநிலை சமன்பாட்டில் பிரதீயீடு செய்தல் (Qd)

Qd = 400 - 2p

Qd = 400 - (2 x 100)

Qd = 400 - 200

Qd = 200

**பண்டத்தின் சமநிலை கணியம் = 200 அலகுகள்**

***(01 புள்ளிகள்)***

**(b)** **i.** **பணத்தின் கேள்விக்கான நோக்கங்கள்**

பண்டத்தின் விலை மற்றும் கேள்விற்கும் இடையிலான தொடர்பு எதிர்கணியமாக காணப்படும். இதனால் இங்கு கேள்வி வளையியானது கீழ்நோக்கி சாய்வடைந்து செல்லும். இதற்கு காரணம் வருமான தாக்கம் மற்றும் பிரதியீட்டு பொருள் பாவனை ஆகும்.

1. **வருமான தாக்கம்**


பண்டத்தின் விலை மாறும் போது நுகர்வோனின் கொள்வனவிற்கான வருமான பங்கீடு மாறும், இதனால் வருமானத்தில் கொள்வனவு

செய்யப்படும் எண்ணிக்கை மாற்றமடையும். அதாவது பண்டத்தின் விலை கூடும் போது அல்லது குறையும் போது அதன் அடிப்படையில் நுகர்வோனின் கொள்வனவு சக்தி மாறுபடும்.

**2. பிரதீட்டு பொருள்**

ஒரு பொருளின் விலை வீழ்ச்சியடையும் போது ஒப்பீட்டளவில் மற்ற பொருட்களின் விலை அதிகமாக காணப்படும்.இதன் விளைவாக அத்தகைய குறிப்பட்ட பொருட்களின் தேவையின் குறிப்பிட்ட விகிதம் விலை

வீழ்ச்சியடைந்த பொருட்களுக்கு திருப்பி விடப்படும்




***(03 புள்ளிகள்)***


**(ii)**

**நுகர்வோர் மிகை**

குறிப்பிட்ட பண்டத்தினை அல்லது சேவையை நுகர்வோன் கொள்வனவு செய்யத் தயாராக இருந்த விலைக்கும் அப் பொருளை உண்மையில் நுகர்வோன் கொள்வனவு செய்த நிலைக்கும் இடையிலான வித்தியாசம் நுகர்வோர் மிகை எனப்படும்.

**உற்பத்தி மிகை**

சந்தையில் உற்பத்தியாளன் பொருளை விற்கவிருந்த விலைக்கும் அப்பண்டத்தினை விற்பனை செய்த விலைக்கும் இடையிலான வித்தியாசம் உற்பத்தி மிகை எனப்படும். இது உற்பத்தியாளனுக்கு நன்மையை தரும்




*(04 புள்ளிகள்)*

*(மொத்தம் 10 புள்ளிகள்)*

## வினா 04 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(a)**

| அத்தியாயம் 04 ஒரு சந்தைமுறையினுள் அரசாங்கம் வகிக்கும் பங்கு |
|---|

**i.** **பாதீட்டு பற்றாக்குறைக்கு நிதியிடும் மூலகங்கள்**

**விரிவாக்க மூலகங்கள்**

- மத்திய வங்கிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும்
- வர்த்தக வங்கிகள் மூலம் பெற்றுக்கொள்ளப்படும்
- வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நிதிக்கடன்கள்
- அரசாங்கத்தின் இருப்பு நிதியை பயன்படுத்தல்

**விரிவாக்கம் அடையாத மூலகங்கள்**

- வெளிநாட்டு மானியங்கள்
- வெளிநாட்டு உதவி
- உள்நாட்டு வங்கித்துறை சாராதா சந்தையில் கடன்பெறுதல்
- தேசிய லொத்தர் சபை

- காப்புறுதி கம்பனிகள
- ஊழியர் நம்பிக்கை நிதியம்
- ஊழியர் சேமபால நிதியம்
- தேசிய சேமிப்பு வங்கி

***(02 புள்ளிகள்)***

**ii. அரச தொழிற்முயற்சி நிறுவனங்களின் நன்மைகள்**

1. இலாபத்தினை சம்பாதிக்காது சேவையை வழங்குவது பொது முயற்சி நிறுவனங்களின் பிரதான இலக்காகும் ஆகவே இது சமூக நல முன்னேற்றத்திற்கு உதவியாக அமையும்.
2. பொது முயற்சி நிறுவனங்களில் சம்பாதிக்கப்படும் இலாபம் தனிநபர்க்கு சொந்தமானதில்லை என்றபடியால் அது அரசசாங்க வருமானத்துடன் சேர்க்ப்படும்.
3. அரசாங்கம் பெரியதளவான செயற்திட்டங்களைக் செய்யும் ஆற்றல்தனைக் கொண்டுள்ளது
4. பொது முயற்சி நிறுவனங்களால் குறித்த துறையில் நிபுணத்துவத்தை பெற்றுக்கொள்ள முடிவதால் வினைத்திறனை மேம்படுத்த முடிதல்
5. பொதுமக்களின் பிரதிநிதிகளால் பொது முயற்சி நிறுவனங்களில் செய்யப்படும் தவறான செயற்பாடுகள் வெளிக்கொண்டு வரப்படலாம்
6. தொழிற்பாதுகாப்பிற்கு உத்தரவாதம் செய்யப்படுகின்றது.

***(02 புள்ளிகள்)***

**(b) பணத்திற்கான கேள்விற்கான நோக்கங்கள்**

| அத்தியாயம் 05 – பணமும் விலைமட்டமும் |
|---|

**1. பரிவர்த்தனை நோக்கம்**

இது மக்களின் அனுதினம் நிதி கொடுக்கல், வாங்கல் பரிமாற்று நடவடிக்கைக்காக அவர்கள் வைத்துக்கொள்ள விரும்பும் பணத்தின் மீதான ஆர்வத்தினை குறிக்கும். மேலும் பணத்தினை கோருவதற்கான பரிவர்த்தனை நோக்கம் உருவாக காரணம் பெரும்பாலான பரிவர்த்தனைகள் பணபரிமாற்றத்தின் அடிப்படையிலே

அமைவதாகும். இங்கு பரிவர்த்தனைக்கு பணம் ஒரு அத்தியாவசிய தேவையாக கருதப்படுவதால் பணத்திற்கான கேள்வி உருவாகின்றது. பணத்திற்கான பரிவர்த்தனை நோக்கத்திற்கு முக்கியமானதாக மெய் வருமானத்தின் அளவு காணப்படுவதால் பணத்தின் கேள்விற்கும் மெய் வருமானத்திற்கும் நேர்கணிய தொடர்பு காணப்படுகின்றது.

**2. முன்னெச்சரிக்கை நோக்கம்**

இது மக்களின் நிச்சயமற்ற அல்லது அவசர நிதி நெருக்கடி தேவைக்கான நடவடிக்கைகள் ஏற்படும் போது பயன்படுத்தும் நோக்கதிற்காக வைத்துக்கொள்ள விரும்பும் பணத்தின் மீதான ஆர்வத்தினை குறிக்கும்.

உதாரணமாக எதிர்பாராமல் ஏற்படுகின்ற மருத்துவ செலவுகள், தீடீரென ஏற்படும் வாகன செலவுகள் மாதிரி நடவடிக்கைகள் போன்றன. இங்கு அவசர தேவைக்கான பணத்தின் சேமிப்பு நடவடிக்கை மூலம் பணபரிவர்த்தனை நடைபெறுவதால் மெய் வருமானத்தின் அளவு பரிவர்த்தனை நோக்கத்திற்கு முக்கியமானதாக காணப்படுகின்றது. ஆகையால் பணத்தின் கேள்விற்கான முன்னெச்சரிக்கை நோக்கம் மற்றும் மெய் வருமானம் என்பனவற்கு நேர்கணிய தொடர்பு காணப்படுகின்றது.

3. **ஊக நோக்கம் அல்லது உத்தேச நோக்கம் (Speculative Motive)**

இது மக்கள் எதிர்காலத்தில் பணத்தை உருவாக்கும் நோக்கதிற்காக வைத்துக்கொள்ள விரும்பும் பணத்தின் மீதான ஆர்வத்தினை குறிக்கும். அதாவது முதலீட்டு நடவடிக்கை மூலம் வட்டியை ஈட்டிக்கொள்ளல். அதாவது பணத்தினை கையில் வைத்திருப்பதனால் எதிர்நோக்கும் இடர்கள் அல்லது பிரிதொரு முதலீட்டு நடவடிக்கையில் ஈடுபடுத்துவதால் எதிர்நோக்கும் பாதிப்புக்கள் மற்றும் அதன் சந்தர்ப்பச் செலவு என்பன உத்தேச நோக்கத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இங்கு பணத்தின் மீதான இடர் மற்றும் அமையச்செலவினை கருத்திற் கொள்ளப்படுவதால் பணத்தின் கேள்விற்கான உத்தேச நோக்கம் மற்றும் வட்டி விகிதம் என்பனவற்கு எதிர்கணிய தொடர்பு காணப்படுகின்றது.

***(06 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

## வினா 05 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

| அத்தியாயம் 08 – சர்வதேச வியாபாரம் |
|---|

**(a)**

i. வெங்காயம் - பாக்கிஸ்தானுக்கு முழு நயத்தைக் கொடுக்கும்.
பூண்டு - பாக்கிஸ்தானுக்கு முழு நயத்தைக் கொடுக்கும்.

***(02 புள்ளிகள்)***

ii.

| நாடு | வெங்காயம் (கிலோகிராம்) | பூண்டு (கிலோகிராம்) |
|---|---|---|
| பாக்கிஸ்தான் | 0.5 | 2 |
| இந்தியா | 2 | 0.5 |

**பாக்கிஸ்தான்** - பாக்கிஸ்தானை பொருத்த வரையில் வெங்காயத்தினை உற்பத்தி செய்வதில் ஒப்பீட்டளவில் நன்மை உள்ளது ஏனெனில் இந்தியாவை விடவும் குறைந்தளவிலான சந்தர்ப்பச்செலவில் பாக்கிஸ்தான் ஆல் வெங்காயத்தினை உற்பத்தி செய்யமுடியும்

**இந்தியா** - இந்தியாவை பொருத்த வரையில் பூண்டினை உற்பத்தி செய்வதில் ஒப்பீட்டளவில் நன்மை உள்ளது, ஏனெனில் பாக்கிஸ்தானை விடவும் குறைந்தளவிலான சந்தர்ப்பச்செலவில் இந்தியாவினால் பூண்டினை உற்பத்தி செய்யமுடியும்

**அமையச்செலவிற்கான கணிப்பீடு**

**பாக்கிஸ்தான்**

| | | |
|---|---|---|
| வெங்காயம் | = 12/24 | = 0.5 பூண்டு உற்பத்தி அலகுகள் |
| பூண்டு | = 12/24 | = 2 வெங்காயம் உற்பத்தி அலகுகள் |

**இந்தியா**

| | | |
|---|---|---|
| வெங்காயம் | = 08/04 | = 2 பூண்டு உற்பத்தி அலகுகள் |
| பூண்டு | = 04/08 | = 0.5 வெங்காயம் உற்பத்தி அலகுகள் |

***(04 புள்ளிகள்)***

**(b)** <u>**சர்வதேச வியாபாரத்தின் அனுகூலங்கள்**</u>

1. **உற்பத்தி அதிகரிப்பு** – சுதந்திர வர்த்தகமானது உற்பத்தில் சிறப்புதேர்ச்சியுடைய நாடுகளை அனுமதிப்பதனால் ஒப்பீட்டளவில் இது நன்மையை பயக்குகின்றது. சிறப்புதேர்ச்சியுடைய நாடுகள் பொருளதார சிக்கனம் மற்றும் வெளியீட்டில் அதிகரிப்பு ஏற்படுவதால் செயற்திறனில் நன்மை ஏற்படுகின்றது.

2. **ஒரு நாடானது தன்னால் உற்பத்தி செய்ய முடியாதவற்றை இறக்குமதி செய்யும்.** சர்வதேச வர்த்தகமானது அதன் நாட்டு எல்லைக்குள் உற்பத்தி செய்யமுடியாத உற்பத்திகளையோ அல்லது உற்பத்தி செய்ய ஏற்படும் கிரயம் கூடிய பொருட்களையோ நுகர்வதற்கு இயல செய்கின்றது இதனால் வெளிநாட்டு வியாாபரம் மூலம் இறக்குமதி செலவு மலிவானதாக காணப்படுகின்றது.

3. **வளங்களின் உச்சப்பயன்பாடு**- சர்வதேச வர்த்தகமானது ஒரு நாடு அதனுடைய வளங்களை உச்ச எல்லைவரை பயன்படுத்திக்கொள்ள உதவுகின்றது. ஒரு நாடு இறக்குமதிகளையும் ஏற்றுமதிகளையும் செய்யாமல்விட்டால் அதனுடைய சில வளங்கள் பயன்படுத்தப்படமுடியாமல் போய்விடும். ஆகவே வளங்கள் வீணாகுவதை தவிர்க்க இது உதவுகின்றது.

4. **நுகர்வோர்களுக்கு நன்மை –** நுகர்வோர்கள் அவர்களுடைய சொந்த நாட்டில் உற்பத்தி செய்ய முடியாத தரம் கூடிய பொருட்கள் மற்றும் சேவைகளை வேறுபட்ட நாடுகளிலிருந்து பெறப்படும் இறக்குமதிகள் மூலம் நுகரும் சந்தர்ப்பத்தினை சர்வதேச வியாபாரம் வழங்குகின்றது.

5. **சர்வதேச தொடர்புகளை மேம்படுத்துகின்றது** – சர்வதேச வியாபாரமானது தேசங்களுக்கிடையில் அமைதி நன்மதிப்பு மற்றும் பரஸ்பர புரிந்துணர்வினை வளர்க்கின்றது. நாடுகளின் பொருளாதார பரஸ்பர தங்கியிருப்பானது நெருக்கமான கலாச்சாரத் தொடர்பிற்கு வழிவகுப்பதோடு அவர்களுக்கிடையில் யுத்தங்கள் வராமல் தடுக்கின்றது.

6. **மிகை உற்பத்தியின் பயன்பாடு**- சர்வதேச வியாபாரமானது வேறுபட்ட நாடுகள் தங்களுடைய மிகை உற்பத்திகளை ஏனைய நாடுகளுக்கு விற்கவும் வெளிநாட்டு செலவாணியை உழைக்கவும் இயலச்செய்கின்றது.

7. **வியாபார தளம்பல்களை குறைக்கின்றது** – சந்தையின அளவினை பாரிய நிரம்பலுடன் பெரிதாக உருவாக்குவதன் மூலம் சர்வதேச வியாபாரத்தின் விரிவான கேள்வி வியாபார தளம்பல்களை குறைக்கும். பண்டங்களின் விலையானது இன்னும் உறுதியாக இருப்பதற்கு முனைப்படும்.

***(04 புள்ளிகள்)***
***(மொத்தம் 10 புள்ளிகள்)***

***பகுதி B முடிவு***

**பகுதி C**

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06 ற்கான பரிந்துரைக்கப்பட்ட விடைகள்

**(A)**

**அத்தியாயம் 07 – பேரின பொருளாதாரமும் வணிகச் சூழலும**

**(a) பொருளாதாரதிற்கு பயங்கரவாத தாக்குதலால் ஏற்படும் விளைவுகள்**

1. மக்களுக்கு நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கை மீதான நம்பிக்கை குறைவடைதல் மற்றும் இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும். இது பொருளாதாரத்தின் வர்த்தக வருமானத்தில் வீழ்ச்சியை ஏற்படுத்தும்.

2. சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை வீழ்ச்சியடையும் போது விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா துறை மற்றும் சுற்றுலாதுறையுடன் தொடர்புடைய துறைகள் பாதிக்கப்பட்டது.

3. இவ் பயங்கரவாத தாக்குதலுக்கு பின் சுற்றுலாத்துறை மீதான பரவலான அச்சுறுத்தல் காணப்படுவதால் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அவர்களின் முதலீட்டு நடவடிக்கையினை நாட்டின் பாதுகாப்பு நடவடிக்கையானது மேம்படுத்தப்படும் வரையில் நிறுத்தி வைத்தனர்

4. பாதிப்புக்குள்ளான கிறிஸத்தவ ஆலயங்கள் மறுசீர் அமைத்தல் செலவு மற்றும் தாக்குதலில் மரணமடைந்த மற்றும் பாதிப்புக்குள்ளாகிய பொதுமக்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் தருவதாக வாக்குறுதியளித்த நிவாரணத்தொகைக்கான செலவு என்பன அரசாங்க பாதீட்டில் ஏற்கனவே ஓதுக்கப்படவில்லை. இதன் காரணத்தால் அரசின் வரவு செலவு திட்டத்தில் எதிர்மறையான தாக்கம் ஏற்படும்.

5. இதனால் பொருளாதாரத்தில் கடன்சுமை அதிகரிப்பதுடன் , தேசிய வெளியீட்டில் சரிவு நிலை ஏற்பட்டு தேசிய வருமானம் வீழ்ச்சியை தழுவியது.

6. இவ் பயங்கரவாத தாக்குதலுக்கு பின் சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்தால் , வெளிநாட்டு வருமானம் குறைந்ததுடன், வெளிநாட்டு முதலீட்டு நடவடிக்கை மற்றும் மூலதன உட்பாய்ச்சல் போன்றன பாதிப்புள்ளாகியதன் நிமித்தம் சென்மதி நிலுவை பாதகமான எதிர்மறை நிலையை எய்தியது.

7. சுற்றுலாதுறை வீழ்ச்சியடைந்தால் அதனுடன் தொடர்புடைய ஹோட்டல், விடுதிகள் சுற்றுலாபயணத்துறை ,இரத்தினகல் வியாபாரம் என்பன பாதகமான எதிர்மறை நிலையை எய்தியது. இதனால் தேசிய வருமானம் பாதிப்புக்குள்ளாகியது.

*(06 புள்ளிகள்)*

**(b)**

**அத்தியாயம் 04 – சந்தை முறையினுள் அரசாங்கம் வகிக்கும் பங்கு**

**நேரில் வரிகளின் நோக்கங்கள்**

1. அரசாங்கத்துக்கு வருமானத்தை உருவாக்குதல்
2. தீங்கு விளைவிக்கும் உற்பத்தியின் நுகர்வை தவிர்த்தல்.
3. நல்ல/ தரமான உற்பத்தியின் நுகர்வை ஊக்கப்படுத்தல்
4. இறக்குமதியை குறைத்தல்
5. உள்நாட்டு உற்பத்தியாளரை ஊக்கப்படுத்தல்
6. வெளிநாட்டு நாணயமாற்றினை பாதுகாத்தல்

*(06 புள்ளிகள்)*

**B**

**அத்தியாயம் 09 – பொருளாதார வளர்ச்சியும் மற்றும் அபிவிருத்தியும்**

**(a)**

**மொத்த பெறுமதி சேர்த்தல் - அடிப்படை விலையில்**

| | **ரூபா.** |
|---|---|
| விவசாயம், வனவியல் மற்றும் மீன்பிடி | 3,000 |
| உற்பத்தி சுரங்களில் குவாரிகளில் மற்றும் ஏனைய கைத்தொழில்கள் | 2,600 |
| நிருமானம் | 2,000 |
| மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம் போக்குவரத்து களஞ்யப்படுத்தல் தங்குமிடம் மற்றும் உணவுச் சேவை நடவடிக்கைகள் | 4,500 |
| தகவல மற்றும் தொடர்பாடல் | 2,000 |
| நிதியில் மற்றும் காப்புறுதி நடவடிக்கைகள் | 2,500 |
| இருப்பிட உரிமை உள்ளிட்ட நிலம் வீடு மனை வாங்கி விற்றல் நடவடிக்கைள் | 1,200 |

| | |
|---|---|
| தொழில்சார சேவைகள் மற்றும் ஏனைய தனிப்பட்ட சேவை நடவடிக்கைகள் | 2,000 |
| அரச நிருவாகம் பாதுகாப்பு கல்வி மனித உடல்நலம் மற்றும் சமூக வேலை நடவடிக்கைகள் | 10,500 |
| **மொத்த பெறுமதி சேர்த்தல் - அடிப்படை விலையில் (GVA)** | **30,300** |

*(06 புள்ளிகள்)*

**(b)**

**மொத்த உள்நாட்டு உற்பத்தி - சந்தை விலையில்**

| | |
|---|---|
| மொத்த பெறுமதி சேர்த்தல் - அடிப்படை விலையில் | 30,300 |
| கூட்டுக – பொருட்கள் மீதான வரி | 1,500 |
| கழிக்க – பொருட்கள் மீதான மானியங்கள் | (1,000) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தி - சந்தை விலையில் GDP | **30,800** |

*(03 புள்ளிகள்)*

**(C)**

**தேசிய கணக்குகள் தயாரிப்பதன் நோக்கங்கள்**

- பொருளாதார செயல் திறனை மதிப்பிடுவதற்கு
- உலகிலுள்ள மற்றைய பொருளாதாரத்துடன் ஒப்பீடு செய்வதற்கு
- பொருளாதார வளர்ச்சியை அளவிடுவதற்கு
- பொருளாதாரத்தின் கட்டமைபினை புரிந்து கொள்ளல்
- தேசிய தலா மூலதன வருமானத்தினை கணிப்பீடு செய்வதற்கு
- பேரீன பொருளாதாரத்தின் நடத்தைக்கான மாற்றல்கனை திட்டமிடல் செய்வதற்கு
- பொருளாதார சூழல் மற்றும் பயன்பாட்டினை புரிந்துகொள்வதற்கு
- பொருளாதார காரணிகளுக்கிடையே உள்ள செயல்பாட்டு தொடர்பினை இனங்கண்டு கொள்வதற்கு.

*(03 புள்ளிகள்)*
*(மொத்தம் 20 புள்ளிகள்)*

**பகுதி C முடிவு**

## *Notice:*

These answers complied and issued by the Education and Training Division of AAT Sri Lanka constitute part and parcel of study material for AAT students.

These should be understood as Suggested Answers to question set at AAT Examinations and should not be construed as the “Only” answers, or, for that matter even as “Model Answers”. The fundamental objective of this publication is to add completeness to its series of study texts, designs especially for the benefit of those students who are engaged in self-studies. These are intended to assist them with the exploration of the relevant subject matter and further enhance their understanding as well as stay relevant in the art of answering questions at examination level.

*© 2019 by the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka). All rights reserved. No part of this document may be reproduced or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording or otherwise without prior written permission of the Association of Accounting Technicians of Sri Lanka (AAT Sri Lanka)*